**தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை - 2024**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து சபையின் நிதிக்கூற்றுக்களானது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் வகையில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இலங்கை கணக்காய்வு நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையை தொடர்ந்து செயற்படுத்தும் இயலுமையை தீர்மானித்தல், முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் சபையை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்றிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 **நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதானது அவை தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் இல்லாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் எண்ணத்தில் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துரணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டிற்காக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்த தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபையின் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரம் கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்க இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்திளை பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்ப்படுத்துதல், தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவைப்படும் வகையில் கொடுக்கல்வாங்கல்களைப் பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசங்கள் காணப்படுமாயின் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான ‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையினைப் பேணுதல் அத்தியவசியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியிருக்காமை

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 48 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானங்கள் செலவுகளுக்கு எதிரீடு செய்யப்படாதிருக்க வேண்டிய | வருமானங்களும் செலவுகளும் பேரேட்டில் தனித்தனியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் நிதிக்கூற்றுக்களில் போது | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் சபையினால் இரண்டு சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,527,500 மொத்த தொகையான வருமானங்களிலிருந்து ரூபா 1,708,730 மொத்த தொகையான செலவுகள் எதிரீடு செய்யப்பட்டு ரூபா 181,230 தேறிய செலவுகள் காட்டப்பட்டிருந்தது. | தேறிய வித்தியாசம் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான கணக்கீட்டுத் தவறுகள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரண விடயத்தை மீள்மதிப்பு செய்கையில் அச்சொத்து சார்ந்துள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரண வகுப்பு முழுமையாக மீள்மதிப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு எதிராக பகுதி பகுதியாக மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டிடக் கணக்கின் மீதி ரூபா 279,295,776 ஆக இருந்ததுடன் அதற்கு ரூபா 35,510,876 தொகையான கட்டிடங்களின் கிரயப் பெறுமதியும் ரூபா 243,784,900 தொகையான கட்டிடங்களின் மீள்மதிப்பு பெறுமதியும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க எதிர்காலத்தில் மீள்மதிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | -மேற்படி- |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 65 ஆம் ப்ந்தியின் பிரகாரம் ஒரு சொத்தின் எச்சப் பெறுமதியையும் பயனளிக்கும் ஆயுள் காலத்தினையும் ஆகக்குறைந்தது ஒவ்வொரு வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதித் திகதியின் போது மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 288,900 கிரயமான மோட்டார வாகனம், ரூபா 1,484,156 தொகையான நூல் நிலையப் புத்தகங்கள் மற்றும் ரூபா 27,274,126 தொகையான ஆய்வுகூட உபகரணங்கள் முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தன. அதற்கு | சொத்துக்களின் வினைத்திறனான ஆயுள் காலத்தினை மீண்டும் மீளாய்வு செய்து நியாயப்பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் காட்ட வேண்டிய போதிலும் நடைமுறையில் இச்சொத்துக்களின் ஆயுள் காலம் / இயலளவுப் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்காக செலவு செய்ய வேண்டி ஏற்படும். அதன் மூலம் சபைக்கு சேர்க்கப்பட்ட பெறுமதி இல்லை என்பதனால் நடைமுறையில் மேற்கொள்ளப்படவில்லை. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | இணங்க இடம்பெற்றுள்ள மதிப்பீட்டுக் குறைபாட்டினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 11 இன் 44 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு சொத்தாக அடையாளங்காணப்பட்ட பரிமாற்றம் செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான வளங்களின் உட்பாய்ச்சினை மிகைக் கட்டணமாக அடையாளங்கண்டு வருமானத்திற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 40,000,000 மூலதன மானியத்தை வருமானத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் கிடைத்திருந்த மூலதன மானியம் சம்பந்தமாக நியமத்தின் 124 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக அரசாங்கத்தின் மூலதன மானியமாக ரூபா 162,845,947 மீதியானது உரிமை மூலதனத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | அரசாங்கத்தின் மூலதன மானியத்தை 2025 ஆம் ஆண்டிலிருந்து இறுதிக் கணக்குகளில் ஒரு வருமானமாக எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். 2025 ஆம் ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது 2024 ஆம் ஆண்டிற்கான இச்செம்மையாக்கலினை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் 2023 வரை கிடைத்துள்ள மூலதன மானியத்தினை முன்கொண்டு வந்து மூலதன ஒதுக்கத்திற்கு செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | -மேற்படி- |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | 1992 ஆம் ஆண்டின் போது ரூபா 4,350,000 பெறுமதிக்கு 99 ஆண்டுகள் குத்தகையின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கொழும்பில் அமைந்துள்ள தலைமை அலுவலக காணி 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 365,000,000 பெறுமதிக்கு மீள்மதிப்புச் செய்து மீள்மதிப்பு செய்யப்பட்ட பெறுமதி | கணக்குகளில் ஒரு சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டுள்ள மீள்மதிப்புச் செய்யப்பட்ட பெறுமதியானது 2025 ஆம் ஆண்டின் போது சொத்துக்கள் கணக்குகளிலும் மீள்மதிப்பு ஒதுக்க கணக்குகளிலும் செம்மையாக்குவதற்கு | நிதிக்கூற்றுக்களில் இப்பிழைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒதுக்க கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. சபைக்குச் சொந்தமில்லாத இந்த குத்தகை காணியை மீள்மதிப்பு செய்ய முடியாததுடன் அதன் மூலம் உருவாகிய ஒதுக்கப் பெறுமதியை கணக்குகளிலிருந்து பழிவழிப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதற்கிணங்க நிதியற்ற சொத்துக்கள் மற்றும் ஒதுக்க பெறுமதி ரூபா 360,650,000 அதிகரித்து நிதி நிலைமை கூற்றில் காட்டப்பட்டிருந்தது. மேலும் குத்தகைப் பெறுமதி ரூபா 4,350,000 ஆன இக்காணிக்கு வருடாந்தம் பெறுமானத் தேய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | முப்பது ஆண்டுகள் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள ரூபா 4,085,019 பெறுமதியான ஹோமாகம பிடிபன காணியானது காணிக் கணக்கின் கீழ் காடட்டப்பட்டிருந்தும் வருடாந்தம் காலக்கழிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை மேற்கொண்டதன் பின்னர் முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கல்களை நாட்குறிப்பின் மூலம் கடந்து சென்ற ஆண்டுகள் தொடர்பான காலக்கழிவுத் தொகையை கணக்குகளில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | காலி மற்றும் தலங்கம புனர்வாழ்வு நிலையங்கள் அமைந்துள்ள சுகாதார அமைச்சிற்கு சொந்தமான காணிகளில் சபையினால் ரூபா 33,834,959 செலவு செய்து கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தும் இக்காணிகளை பொறுப்பேற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுகாதார அமைச்சிற்கு சொந்தமான காணி ஆனதுடன் பொறுப்பேற்பதற்காக தேவையான சட்டரீதியான மற்றும் ஏனைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அது வரை சபையின் கணக்கேடுகளில் சொத்துக்களாக கணக்கீடு செய்ய முடியாது. | காணிகளை பொறுப்பேற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கைக்கு வெளியே சம்பளமின்றி தொழிலுக்காக விடுமுறையைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக ஏற்படுத்திக்கொண்ட | இத்தவறினை 2025 ஆம் ஆண்டில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிட வேண்டிய பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கையை மீறிய இரண்டு உத்தியோகத்தர்களுக்காக அறவிட வேண்டிய ரூபா 1,425,699 மொத்த தொகை கணக்கீடு செய்யப்படவில்லை. | | |
| (உ) | சபையினால் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பின்பற்றப்படுகின்றது என கணக்கீட்டு கொள்கை குறிப்பு இலக்கம் 2.1 இன் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன் பணிக்கொடையை கணிப்பீடு செய்தல் மற்றும் கணக்கு வைப்பதற்காக பொதுதுறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 19 பின்பற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் குறிப்பு இலக்கம் 2.5 இன் கீழ் இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 19) பிரகாரம் ஊழியர் பணிக்கொடைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனக் காட்டப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் போது பணிக்கொடைக்கான ஒதுக்கீட்டுப் பெறுமதி ரூபா 47,222,561 மீதியில் சேவையில் இல்லாத மூன்று உத்தியோகத்தர்களுக்கு ரூபா 329,410 தொகையான பணிக்கொடைக்கான ஒதுக்கீடு மிகையாக மற்றும் பதவியை கைவிட்டுச் சென்ற ஒரு உத்தியோகத்தருக்குரிய செலுத்த வேண்டிய பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா 131,662 குறைத்து கணக்கீடு செய்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா 197,748 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இலங்கை கணக்கீட:டு நியமம் இலக்கம் 19 ஆக காட்டுதல தவறாகும். 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிநிலைமை கூற்றில் பணிக்கொடை கொடுப்பனவு பொறுப்பு ரூபா 329,410 தொகையால் அதிகரித்து காட்டப்பட்டுள்ளது. 2021 நவம்பர் 19 ஆந் திகதி சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர் வேலையை விட்டுப் போயுள்ளார் என மனித வளங்கள் பிரிவினால் நிதிப்பிரிவிற்கு முறைப்படியாக தெரிவிக்கவில்லை. உரிய தவறினை 2025 ஆம் ஆண்டிறகான கணக்குகளில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் இத்தவறினை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| வைப்புச் சான்றிதழ் | 566,263 | வைப்புச் சான்றிதழ் பத்திரம் | இவ்வைப்புக்களுக்குரிய சான்றிதழ் முன்னைய | மீதியை உரிய நிறுவனங்களின் |

| | | |
|---|---|---|
| | காலங்கில் காணாமல் போயுள்ளது. | மூலம் உறுதிப்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய கணக்குகள்**

**1.6.1 முற்பணங்கள்**

.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்படுகின்ற முற்பணக் கணக்குகளில் உள்ள ரூபா 1,434,534 வரவு மீதியினை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பது தொடர்பாக எழுத்து மூல தகவல்கள் பொறுப்புக்கூற வேண்டிய பிரிவிடம் காணப்படாததுடன் அதன் விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 01/2024 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் மீதிகளைப் பதிவழிப்பதற்காக நடவடிக்கை எடுக்குமாறு திறைசேரி நிதிப் பணிப்பாளரிடமிருந்து அறுவுறுத்தல்கள் கிடைத்துள்ளது. 2024 யூன் 06 ஆந் திகதி வரிசை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்திற்காக ஒரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மை** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) 2008 இன் I ஆம் இலக்க போதைப் பொருட்கள் மற்றும் மனநோய் சார்ந்த பொருட்களை சட்டவிரோதமாக கடத்துதல் தொடர்பான மாநாட்டு அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் 31 ஆம் பிரிவு மற்றும் அரசியலமைப்பின் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 44 ஆம் பிரிவின் (2) ஆம் பந்திக்கு இணங்க தயாரிக்கப்பட்ட 2010 மே 10 ஆந் திகதிய 1653/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | | | | |
| (i) | 5 ஆம் பந்தி | முன்னோடி கட்டுப்பாட்டு அதிகாரசபையின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளை அமுல்ப்படுத்துதல் நிறைவேற்றுதல் மற்றும் மேற்கொள்வதற்குத் தேவைப்படுகின்ற ஒரு செயலாளரும் ஏனைய உத்தியோகத்தர்களும் மற்றும் ஊழியர்கள் அதிகாரசபையினால் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் முன்னோடி அதிகாரசபைக்கு 2024 ஆம் ஆண்டு இறுதி வரையும் தேவையான ஆளணியினரைச் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அபாயகர ஔடதங்கள் கட்டுப்படுத்தும் தேசிய சபையின் நான்கு உத்தியோகத்தர்கள் மாத்திரம் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். | 2017 சனவரி 11 ஆந் திகதிய DMS/1683/Vol-III ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் மூலம் முன்னோடி கட்டுப்பாட்டு அதிகாரசபையின் செயலாளர் பதவி நீக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய 07 பதவிகள் சபைக்கு இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளன. தற்பொழுது முன்னோடி கட்டுப்பாட்டு அதிகாரசபையின் ஆளணியிலுள்ள பதவிகளை அதிகரிப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு ஒரு கடிதத்தினை அனுப்பிவைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | அதிகாரச் சட்டத்தில் குறிப்பிட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 7, 8 மற்றும் 10 ஆம் பந்திகள் | 2008 இன் I ஆம் இலக்க போதைப் | 2025 ஆம் ஆண்டிலிருந்து சபை செயலாளரின் | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பொருட்கள் மற்றும் மனநோய் சார்ந்த பொருட்களை சட்டவிரோதமாக கடத்துதல் தொடர்பான மாநாட்டு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டு அதிகாரசபையின் பணிப்பாளர் சபை 2024 ஆம் ஆண்டில் ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் கூடியுள்ளதுடன் பணிப்புரையின் 08 ஆம் மற்றும் 10 ஆம் பந்திகளின் பிரகாரம் அதன் செயற்பாடுகள் தொடர்பாக முன்னோடி அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களால் மீளாய்வினை மேற்கொள்வதற்காக முன்னோடி அதிகாரசபையின் பணிப்பாளர் சபை ஆகக் குறைந்த அளவான கூட்டங்களை நடாத்தியிருக்கவில்லை. | ஒருங்கிணைப்பில் சபை கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (iii) | II ஆம் பகுதி சுற்றாடலை பதிவுசெய்தல் பணிப்புரை 09 | பொருட்களை இறக்குதி செய்வதற்கு அல்லது ஏற்றுமதி செய்வதற்குரியதான செயற்பாடுகளை மேற்கொள்ளுகின்ற சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கிய திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் அனைத்து அனுமதிப்பத்திரங்களும் அதிகாரசபையில் | ஊழியர் பற்றாக்குறையின் காரணமாக நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் வழங்குவதற்கு முடியாமை இன்று வரை காணப்பட்டிருந்தும் 2024 ஆம் ஆண்டில் பதிவுசெய்த அச்சுற்றாடல்கள் தற்பொழுது பரீட்சித்து முடிவடைந்துள்ளதுடன் அந்த | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பதிவுசெய்யப்பட வேண்டியதுடன் 10 சற்றாடலினை பதிவுசெய்வதற்கு விண்ணப்ப பத்திரங்கள் கிடைத்திருந்தும் ஒரு சுற்றாடலுக்காகவேனும் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்குரிய மேலதிக நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது. | |
| (iv) | III ஆம் பகுதி கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பு பணிப்புரை 13 | அதிகாரசபையின் அங்கத்தவர்கள் ஆகக் குறைந்தது 03 மாதங்களுக்கு ஒரு தடவை அனுமதிப்பத்திரதாரர்களின் பதிவுசெய்யப்பட்ட சுற்றாடலுக்கு சமூகமளித்து செயற்பாடுகள் தொடர்பாக கண்காணிப்பு செய்ய வேண்டியதுடன் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள முறைமை, உபகரணங்களின் பயன்பாடு, பேணப்படுகின்ற புத்தகங்கள், ஏடுகள், பதிவேடுகள், அறிக்கைகள் என்பவற்றை பரீட்சிக்க வேண்டிய போதிலும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவுசெய்துள்ள 263 இறக்குமதியாளர்களின் 33 சுற்றாடல்கள் மாத்திரம் பரீட்சிக்கப்பட்டிருந்தன. | இந்த நடவடிக்கையை இன்னும் முறைமைப்படுத்துவதற்காக சுகாதார அமைச்சின் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்களின் உதவியைப் பெற்று சுற்றாடலினைப் பரீட்சிப்பதற்குத் தேவையான ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்வதற்கும் ஏனைய மாற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | -மேற்படி- |
| (ஆ) | 2007 இன் 54 ஆம் இலக்க போதைக்கு அடிமையாகியுள்ள நபர்கள் (சிகிச்சையளித்தல் | போதைக்கு அடிமையாகியுள்ள நபர்களை கவனித்துப் பார்த்தல் மற்றும் | பல்வேறு பிரதேசங்களில் போதைப் பொருள் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு | அதிகாரச் சட்டத்திற்கு இணைந்ததாக வழங்கப்பட்டுள்ள பணிப்புரைக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் புனர்வாழ்வளித்தல்) அதிகாரச் சட்டத்திற்கு இணைந்ததாக வெளியிடப்பட்ட 2010 மே 12 ஆந் திகதிய 1653/19-2010 ஆம் இலக்க வர்த்தமானியின் பணிப்புரை இலக்கம் 02 | புனர்வாழ்வளித்தல் செயற்பாடுகளுக்காக பணிப்புரையின் பிரகாரம் ஒரு அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளாது செயற்படுத்த முடியாதிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டின் இறுதி வரை நாட்டில் 26 தனியார் சிகிச்சை நிலைங்கள் காணப்பட்டதுடன் 13 தனியார் புனர்வாழ்வு நிலையங்கள் மாத்திரம் அனுமதிப்பத்திரத்தினை பதிவுசெய்தலினை நாளதுவரையாக்கியிருந்தது. அதற்கிணங்க 2025 மே 16 ஆந் திகதிய கணக்காய்வுத் திகதி வரை மிகுதியான 13 தனியார் நிலையங்கள் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அனுமதிப்பத்திரம் இன்றி செயற்பட்டு வந்திருந்தது. | சம்பந்தமாக 26 தனியார் சிகிச்சை நிலையங்கள் செயற்படுவதுடன் அவற்றில் புதிதாக அனுமதிப்பத்திரங்களுக்கு விண்ணப்பித்துள்ள 13 சிகிச்சை நிலையங்களுக்கு தேவையான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக கிடைத்துள்ள பாதுகாப்பு அங்கீகார அறிக்கை மற்றும் வர்த்தமானியிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையங்கள் செயற்படுத்தப்படுகின்றதா என்பது சம்பந்தமாக கவனித்துப் பார்த்து அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு பொருத்தமானதா இல்லையா என்பதனை தீர்மானிப்பதற்கு நிர்ணயக்கப்பட்டுள்ளது. | இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(ஊ) பந்தி மற்றும் 2019 சனவரி 12 ஆந் திகதிய DMA/01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தி | உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்குத் தேவையான மனித மற்றும் ஏனைய வளங்களை வழங்குதல் உயர் முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருந்த போதிலும் சபையின் உள்ளக கணக்காய்வாளர் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்ததுடன் நிரந்தரமாக உதவி ஆளணியினர் | தற்பொழுது நிரந்தரமாக இரண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளக கணக்காய்வுப் பிரிவிற்கு இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன் முகாமைத்துவ உதவியாளர் பதவியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் உள்ளக | கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நியமிக்கப்படவில்லலை. | கணக்காய்வுப் பிரிவிற்கு முகாமைத்துவ உதவியாளர்களை இணைத்துக்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய PED 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தி | ஒவ்வொரு பிரிவின் ஊழியர் தேவைப்பாடு மற்றும் தாபன வரைபடத்தினை உள்ளடக்கிய தந்திரோபாய மனித வளங்கள் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சபை அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கிவ்லலை. | தந்திரோபாய மனித வளங்கள் திட்டத்தினை தயாரிப்பததற்கு தேவையான ஊழியர்களை முன்னறிதல் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய 2022/03 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின 03(viii) ஆம பிரிவு | ஊழியர் காப்புறுதி முறைமைக்காக 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகள் தொடர்பாக ரூபா 5,302,555 தொகை சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை மீறி செலுத்தப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் செப்தெம்பர் மாதத்திலிருந்து அடுத்துவரும் 12 மாதங்களுக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அட்டுறு அடிப்படையில் மேற்கொண்ட கொடுப்பனவுகள் 09 மாதங்களுக்குரிய தொகை 2024 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் ஒரு செலவாக குறிப்பிடப்பட்டுள்ளது. சபையின் நிகழ்கால பணிப்பாளர் சபையினால் ஊழியர் காபட்புறுதி முறைமையானது தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஊ) | 2024 மே 31 ஆந் திகதிய 01/2020(iii) ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை | | | | |
| | (i) | 5.1 ஆம் பந்தி | பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள அதிகாரச் சட்டம் அல்லது ஏனைய சட்டத்தினால் கட்டணத்தை திருத்தம் செய்வது தொடர்பாக ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு அந்த அதிகாரச்சட்டம் அல்லது சட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ள முறைமையில் கட்டணம் திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் 2010 மே 10 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் வழங்கப்பட்ட 1653/7 ஆம் இலக்க கட்டளை மற்றும் 2010 மே 12 ஆந் திகதி வழங்கப்பட்ட 1653/19 ஆம் இலக்க கட்டளைக்கு இணங்க தயாரிக்கப்பட்ட கட்டணத்தை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2007 இன் 54 ஆம் இலக்க போதைக்கு அடிமையாகியுள்ள நபர்கள் (சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு) தொடர்பான அதிகாரச் சட்டத்திற்கு இணைந்ததாக வழங்கப்பட்ட 1653/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ள கட்டணம் மற்றும் 2008 இன் 01 ஆம் இலக்க போதைப் பொருள் மற்றும் மனநோய் சார்ந்த பொருட்களை சட்டவிரோதமாக கடத்தல் செய்வதற்கு எதிரான மாநாட்டு அதிகாரச் சட்டத்திற்கு இணைந்ததாக வழங்கப்பட்ட 1653/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ள கட்டணத்தை திருத்தம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான திருத்தங்களை எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| | (ii) | 5.2 ஆம் பந்தி | பொதுமக்களுக்கு சேவையை வழங்கும் போது அறவிடப்படுகின்ற கட்டணங்கள் மூன்று | -மேற்படி- | -மேற்படி- |

ஆண்டுகளுக்கு ஒரு தடவை மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 48,707,432 பற்றாக்குயையாக இருந்ததுடன் அதற்கு நொரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 2,248,627 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 46,458,805 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஏனைய செயற்பாட்டு செலவுகள் அதிகரித்தல், ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு அதிகரித்தல் மற்றும் மனிதவளங்கள் அபிவிருத்தி செலவுகள் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி முப்பது ஆண்டு குத்தகை அடிப்படையில் ரூபா 4,085,018 தொகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட ஹோமாகம பிடிபனவில் அமைந்துள்ள ஒரு காணியில் போதைப் பொருட்களை ஊசி மூலம் பாய்ச்சிக் கொள்ளும் நபர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு மற்றும் அவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் ஒரு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 124/2013 ஆம் இலக்க சபைப்பத்திரத்தின் மூலம் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளக்கட்டிருந்தது. எவ்வாறாயினும் அக்காணியை எதிர்பார்த்த செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தாது 10 ஆண்டுகள் காலம் விளைவற்றுக் | தொடர்புபட்ட காணியானது காணிச் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்ட போதிலும் குத்தகை உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்காக அரசாங்க காணிகள் கட்டளைச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கிழான சுதந்திரமான வெகுமதிப் பத்திரம் அந்த அதிகாரசபைக்கு உரித்துடையதல்ல. காணியை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு எந்த தடையும் இல்லை என நகர அபிவிருத்தி, நிர்மாணங்கள் மற்றும் வீடமைப்பு அமைச்சினால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இதில் புதிய சிகிச்சை நிலையத்தை நிர்மாணிபபது | காணியை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டதுடன் காணிக்குரிய குத்தகை உறுதியினை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தமான பிரேரணை தற்பொழுது பணிப்பாளர் சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2007 இன் 54 ஆம் இலக்க போதைக்கு அடிமையாகியுள்ள நபர்கள் (சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு) தொடர்பான அதிகாரச்சட்டத்தின் 4(02) மற்றும் (03) ஆம் பிரிவுகளின் பிரகாரம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஒரு உத்தியோகத்தரினால் நியாயமான வேளையில் அதிகாரச் சட்டத்தின் கீழ் அதிகாரப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள அல்லது நிர்ணயிக்கப்பட்ட ஏதாவது சிகிச்சை நிலையத்திற்கு சென்று அவசியமானது என கருதுகின்ற் பரீட்சிப்புக்களை மேற்கொள்ளக்கூடியதாக இருந்த போதிலும் 26 நிலையங்களில் 2024 ஆம் ஆண்டின் போது 13 நிலைய்ஙகள் மாத்திரம் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன் நிர்ணயிக்கப்பட்ட காலரீதியான அறிக்கையின் மூலம் சிகிச்சை நிலையங்களின் வெற்றி தொடர்பான தகவல்கள் சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 26 தனியார் சிகிச்சை நிலையங்களில் 13 சிகிச்சை நிலையங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அந்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கிய நிறுவனங்கள் மாத்திரம் அவதானிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு இணங்க அந்த சிகிச்சை நிலையங்களின் கண்காணிப்பின் பின்னர் சுருக்கமான காலரீதியான அறிக்கையை சபைக்கு அனுப்பிவைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | தனியார் சிகிச்சை நிலையங்களைப் பரீட்சித்து காலரீதியான அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | முப்பது ஆண்டுகள் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வளவில் இலங்கை கடற்படையின் ஊழிய பஙகளிப்பு மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் | நிர்மாண வேலைகளை இடைநடுவில் நிறுத்தியமை சம்பந்தமாக அப்போது சபைக்குரியதாக காணப்பட்ட வரிசை அமைச்சாகிய பாகாப்பு அமைச்சின் மூலம் விசாரணைகள் | அன்பளிப்பாக கிடைத்த பணத்தை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுததல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 7,051,924 மதிப்பீட்டுப் பெறுமதியில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்ட புதிய சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலைய கட்டிடத்திற்காக 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 5,000,000 அன்பளிப்பாக கிடைத்துள்ளது. இதில் ரூபா 3,541,976 தொகை கட்டிட நிர்மாணப் பொருட்களுக்காகவும் ஏனைய சேவைகளுக்காகவும் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 2,100,397 தொகையான பொருட்கள் கட்டிடத்தினை அரைவாசி நிர்மாணிப்பதற்கு பயன்படுத்தி நிர்மாண வேலைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டன. அத்திகதியில் மிகுதியாக இருந்த பொருட்களின் பெறுமதி ரூபா 1,441,579 ஆகும். 2024 யூலை மாதம் மேற்கொள்ளப்பட்ட பௌதீக இருப்பு பரீட்சிப்பிற்கு இணங்க 19 விடயங்களின் பொருட்கள் காலாவதியாகியிருந்தது. இக்கட்டிடத்தின் மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்காக ரூபா 7,721,116 மதிப்பீடு இலங்கை கடற்படையினால் 2024 செப்தெம்பர் 07 ஆந் திகதி சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் 2025 மே 23 கணக்காய்வுத் திகதி வரையும் அதன் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நடாத்தப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் கடற்படையின் ஊழிய பங்களிப்புடன் 2025 மே 25 ஆந் திகதியிலிருந்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான நவதிகந்த சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையத்தில் ஒரு துறவியின் தனிப்பட்ட செல்வத்தை தானம் செய்ததன் மூலம் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 12,800,000 பெறுமதியான கட்டிடம் மற்றும் ஒரு சர்வதேச நிறுவனத்தின் உதவியின் அடிப்படையில் | நவதிகந்த நிலையத்தில் 02 விடுதிகளைச் செயற்படுத்துவதற்கு போதிய அளவிலான ஆளணியினர் இல்லாததன் காரணமாக தற்பொழுது நிலையத்தில் இருக்கின்ற நிரந்தர ஆணளணியினர்களால் பழைய விடுதியில் சிகிச்சை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நன்கொடையாகப் பெற்ற கட்டிடங்கள் மற்றும் தளபாட உபகரணங்களை சிக்கனமாகவும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கும் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணிக்கப்பட்ட ரூபா 7,844,963 பெறுமதியான கட்டிடம் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய வகையில் அனைத்து மரத்தளபாடங்களையும் உபகரணங்களையும் உள்ளடக்கியிருந்தும் 2024 ஆம் ஆண்டில் அக்கட்டிடம் போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ள நபர்களை புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கைகளுககாக பயன்படுத்தாது விளைவற்றுக் காணப்பட்டது. பயன்படுத்தாது காணப்பட்ட இரண்டு கட்டிடங்களில் 62 நபர்களுக்கும் நிலையத்தின் காணியில் காணப்படுகின்ற தற்பொழுது பயன்படுத்தப்படுகின்ற கட்டிடத்தில் 60 நபர்களுக்கும் புனர்வாழ்வளிக்கும் வசதிகள் காணப்பட்டிருந்தும் பழைய கட்டிடத்தில் 12 இற்கும் 37 இற்கும் இடைப்பட்ட அளவிலான நபர்களுக்கு மாத்திரம் புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க புனரர்வாழ்வளிக்கப்படுகின்ற நபர்களின் எண்ணிக்கையானது புனர்வாழ்வளிக்கக்கூடியதாக இருந்த எண்ணிக்கையில் 10 சதவீதத்திற்கும் 30 சதவீதத்திற்கும் இடைப்பட்டதாகும். | எதிர்காலத்தில் போதியளவு ஆளணியினர்களைச் சேர்த்துக்கொண்டதன் பின்னர் சிகிச்சை பெறுபவர்களுக்கு வதிவிட சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களை மீண்டும் அமுல்ப்படுத்தலாம். | |
| (இ) | தலங்காமையில் அமைந்துள்ள சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளித்தல் நிலையத்தில் 34 நலன்பெறுனர்களுக்கான வசதிகள் காணப்பட்டிருந்தும் ஒரு மாதத்திற்கு 04-11 இற்கு | இராஜகிரிய தலைமை அலுவலகத்தின் பராமரிப்பு நடவடிக்கைகள் முடிவடைந்ததன் பின்னர் தலங்கம நிலையத்தில் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு | காணப்படுகின்ற வசதிகளை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இடைப்பட்ட நலன்பெறுனர்கள் மாத்திரம் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். இரண்டு மாடிக் கட்டிடத்தின் இரண்டாம் மாடி முழுமையாகப பயன்படுத்தப்படாததுடன் நிலையத்தில் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளித்தல் நடவடிக்கைகளுக்காக போதியளவு திறந்த வெளி இடவசதிகளும் இருக்கவில்லை. | நிர்ணயிக்கப்பட்டுள்ளது.<br><br>திறந்தவெளி இடவசதிகள் இல்லாததனால் உள்ளக விளையாட்டு நடவடிக்கைகளுக்காக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. சிகிச்சை பெறுபவர்கள் இதற்கு நாளாந்தம் ஈடுபடுத்தப்படுவதுடன் பொறுப்புக்களுடன் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்குரிய அனைத்து அம்சங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. | |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது ரூபா 11,643,921 செலவு செய்து செயற்படுத்தப்பட்டு வந்த தலங்கமவில் அமைந்துள்ள புனர்வாழ்வு நிலையத்தில் மகளிர் புனர்வாழ்வு நிலையம் காணப்பட்டிருந்தும் அதன் புனர்வாழ்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அந்த நிலையத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த பெண் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 09 ஆக இருந்ததுடன் 2025 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 07 பெண் உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கி 16 பெண் உத்தியோகத்தர்கள் அந்த நிலையத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தும் 2021 ஆம் ஆண்டின் பின்னர் எந்த பெண் சேவை நாடுனர்களும் புனர்வாழ்வளிக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 மே 20 ஆந் திகதியிலிருந்து பெண் போதைப் பொருட்களைப் பயன்படுத்துபவர்களுக்கு வதிவிட சிகிச்சையளிக்கும் புனர்வாழ்வு நிகழ்சித்திட்டங்களை மேல் மாகாண தடுப்பு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளித்தல் நிலையத்தில் (தலங்கம நிலையத்தில்) ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | மகளிர் சேவை நாடுனர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக பேணப்படுதல் வேண்டும். |
| (உ) | 2007 இன் 54 ஆம் இலக்க போதைக்கு அடிமையாகியுள்ள நபர்க்ள | நீதி அமைச்சின் மூலம் இந்த அதிகாரச்சட்டதத்தினை திருத்தம் செய்தல் | அதிகாரச்சட்டத்தை திருத்தம் செய்யும் நடவடிக்கையை |

| | | | |
|---|---|---|---|
| | (சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளித்தல்) தொடர்பான அதிகாரச்சட்டத்தினை திருத்தம் செய்வதற்காக 2022 சனவரி 24 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது அமைப/21/2279/303/176 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் அதிகாரச்சட்டத்தை திருத்தம் செய்யும் நடவடிக்கையை பூர்த்திசெய்து அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிவ்லலை. | மேற்கொள்ளப்படுவதுடன் சபையின் இறுதி சிபாரிசு 2023 செப்தெம்பர் 25 ஆந் திகதி நீதி அமைச்சு மற்றும் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | துரிதமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2007 இன் 54 ஆம் இலக்க போதைக்கு அடிமையாகியுள்ள நபர்கள் (சிகிச்சை புர்வாழ்வளித்தல்) தொடர்பான அதிகாரச்சட்டத்தின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் சட்டதுறையில் சிறப்பு தேர்ச்சி பெற்றுள்ள நபர்களுக்கு மத்தியில் அல்லது ஆபத்தான போதைப்பழக்கத்துடன் தொடர்புடைய உடலியல் காரணிகள் அல்லது சமூகப் பிரச்சினைகள் தொடர்பாக அனுபவமும் அறிவும் உள்ள நபர்களுக்கு மத்தியில் பத்து நபர்களுக்கு மேற்படாத நபர்களின் எண்ணிக்கையைக் கொண்ட உள்ளக ஆய்வுச் சபை நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது உள்ளக ஆய்வுச் சபை திருத்தங்களை உள்ளடக்கி அதிகாரச்சட்டத்தை திருத்தம் செய்து இறுதி வரைபு சட்ட வரைபுத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த அங்கீகரித்த ஆளணியினர் தலைமை அலுவலகத்தையும் மாகாண அலுவலகங்களையும் உள்ளடக்கி 374 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 186 ஆகும். அதற்கிணங்க வெற்றிடங்களின் எண்ணிக்கை 188 ஆகும். காணப்படுகின்ற ஆளணியினர் தொடர்பான ஒரு மீளாய்வு 05 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக மேற்கொள்ளப்பட்டதுடன் உள்ளபடியாக தேவைப்படுகின்ற ஆளணியினரை அடையாளங்கண்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவிலலை. | 2021 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 21/1596/304/134 ஆம் இலக்க நிதி அமைச்சின் மற்றும் அமைச்சரவையின் தீர்மானத்திற்கு இணங்க 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்பபுக்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதனால் சபையின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதுள்ளது. | ஆளணணணியினர் தொடர்பாக ஒரு மீளாய்வினை மேற்கொண்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |